முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி.

முன்னிலை :– **திரு.எம்.செல்வம், எம்.எல்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி, தூத்துக்குடி

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண் – 1/2023 இன்**

காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் அசல் மனு எண்– 179/2021

1) தங்கதுரை
2) முருகன்
3) சந்திரகனி

... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

// எதிர் //

1) ராஜு
2) எஸ்தர் ராணி

... எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இம்மனு கடந்த 02.03.2024 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.வேல்ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் மனு GWOP No.179/2021 ல், ம.சா.1 மற்றும் ம.சா.2 ஐ குறுக்குவிசாரணை செய்யாததினால் முடிக்கப்பட்ட எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (re–

M SELVAM

Digitally signed by M SELVAM
Date: 2024.03.15 18:19:25 +0530

open) செய்து உத்தரவிடக் கோரி இம்மனு மனுதாரர்களால் உரிமையியல் விசாரணை முறை சட்டம், பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி ஆவணத்தின் சுருக்கம்:–</u>**

இம்மனுவின் 1ம் மனுதாரர், அசல் மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவார். 1ம் மனுதாரர் தனக்காகவும், அவரது தந்தை மற்றும் தாயான 2 மற்றும் 3 மனுதாரர்களுக்காகவும் இந்த ஆணையுறுதி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். அசல் மனுவின் மனுதாரர்களான இந்த எதிர்மனுதாரர்கள் முறையே, 1ம் மனுதாரரின் மனைவியின் தந்தை மற்றும் தாய் ஆவார்கள். 05.08.2020 அன்று 1ம் மனுதாரரின் மனைவி இறந்தது தொடர்பாக, 1ம் மனுதாரர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரரின் குழந்தை சாய் முகிலனின் காப்பாளராக எதிர்மனுதாரர்களை நியமிக்க கோரி, எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அசல் மனுவில் 1ம் மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து, கட்சி செய்து வருகிறார். அசல் மனுவில் 09.08.2023 அன்று ம.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில், 1ம் மனுதாரருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவினால் வழக்கறிஞரை சந்தித்து, வழக்கு விபரங்களைக் கூற இயலவில்லை. 1ம் மனுதாரரின் பெற்றோர்களும், வயோதிகத்தின் காரணமாக வழக்கறிஞரை சந்திக்க செல்லவில்லை. இந்நிலையில், 09.08.2023 அன்று வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்யாத நிலையில், இந்நீதிமன்றம் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பித்தது. 29.11.2023 அன்று 1ம் மனுதாரர் வேறு வழக்கிற்கு

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2024.03.15 18:19:37 +0530

நீதிமன்றத்திற்கு வந்தபோதுதான், அசல் மனுவில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு தெரிய வந்து, உடனே வழக்கறிஞரை சந்தித்து, இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர். 09.08.2023 அன்று மனுதாரர்கள் ம.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்யாத தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாய் ஏற்பட்டதாகும். அசல் மனுவில் மனுதாரர்களுக்கு நல்ல கட்சி உள்ளது. எனவே, உத்தரவிற்காக வைக்கப்பட்டுள்ள அசல் மனுவில், ம.சா.1, ம.சா.2 ஐ குறுக்குவிசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளதால், முடிக்கப்பட்ட எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு செய்யவேண்டும். இல்லையெனில், மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும்.

3) <u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்களின் மனு பிரதம நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும். 05.08.2020 அன்று 1ம் மனுதாரரின் மனைவி இறந்தது தொடர்பாக, அவர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையல்ல. 1ம் மனுதாரர் மீது தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலேயே, அரசுத் தரப்பால் வைழ வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளது. அசல் மனுவில், 09.08.2023 அன்று மனுதாரர்கள், ம.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்யாததற்கு, மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் உண்மையல்ல. உண்மையில், 1ம் மனுதாரருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டிருந்தால், என்ன வகையான உடல்நலக் குறைவு ஏற்பட்டிருந்தது, அதற்காக எந்த வகையில் சிகிச்சை

M SELVAM

Digitally signed by M SELVAM
Date: 2024.03.15 18:19:44 +0530

பெற்று வந்தார் என்று தெரிவித்திருப்பார்கள். மேலும், 2, 3 மனுதாரர்கள் நல்ல உடல் நிலையிலேயே இருந்து வருவதால், அவர்கள் வழக்கறிஞரை சந்திக்க இயலாத அளவிற்கு, வயோதிகத்தின் காரணமாக பாதிக்கப்படவில்லை. எனவே, 1ம் மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டிருந்தாலும், 2, 3 மனுதாரர்கள் அவர்களது வழக்கறிஞரை சந்தித்து குறுக்குவிசாரணைக்கான தகவல்களை தெரிவித்திருக்கலாம். எனவே, மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு சட்டப்படி நிலைக்கத்தக்கது என்பதினால், ம.சா.1, ம.சா.2 ஐ குறுக்குவிசாரணை செய்வதற்காக அசல் மனுவில், முடிக்கப்பட்ட எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) <u>இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:-</u>

மனுதாரர்கள் மனுவில் கோரியபடி, உத்தரவிற்காக வைக்கப்பட்டுள்ள பிரதான அசல் மனு GWOP No.179/2021ல், ம.சா.1 மற்றும் ம.சா.2 ஐ குறுக்குவிசாரணை செய்வதற்காக, எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (re-open) செய்து உத்தரவிட வேண்டுமா? என்பதேயாகும்.

<u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>

5) இம்மனுவின் மனுதாரர்கள் GWOP No.179/2021 மனுவில் எதிர்மனுதாரர்கள் ஆவார்கள். இம்மனுவின் 1ம் மனுதாரர், எதிர்மனுதாரர்களின்

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2024.03.15 18:19:54 +0530

மகளான வெண்ணிலாவை திருமணம் செய்துகொண்ட நிலையில், 1ம் மனுதாரருக்கும், வெண்ணிலாவிற்கும் இளவர் குழந்தை சாய்முகிலன் பிறந்ததாகவும், பின்னிட்டு இளவர் சாய்முகிலனின் தாயாரான வெண்ணிலா 05.08.2020ல் சந்தேகத்திற்கிடமான முறையில் இறந்துவிட்டதாகவும், இளவர் சாய்முகிலனை மனுதாரர்களிடமிருந்து, எதிர்மனுதாரர்களிடம் ஒப்படைக்க கோரி, காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டம், பிரிவுகள் 7, 8, 10 (i), 15 (1) மற்றும் பிரிவு 25 ன் கீழ் அசல் மனுவை எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்ததில், அசல் மனுவின் 1ம் மனுதாரரான ராஜு ம.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்ட நிலையில், ம.சா.1 ஐ இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்தா வைக்கப்பட்டிருந்தும், மனுதாரர்கள் 09.08.2023ல் ஆஜராகா நிலையில், இம்மனுதாரர்கள் GWOP No.179/2021ல் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு, பின்னர் இந்த எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில் ம.சா.2ம் விசாரிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, உத்தரவிற்காக அசல் மனு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் 09.08.2023 அன்று அசல் மனுவில் குறுக்குவிசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், 1ம் மனுதாரருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டிருந்ததின் காரணமாக, 1ம் மனுதாரரின் பெற்றோர்களான 2, 3 மனுதாரர்கள் வயோதிகத்தின் காரணமாக வழக்கறிஞரை சந்தித்து விபரங்களைக் கூற இயலாமல் போய்விட்டதாகவும், அதனால், அசல் மனுவில் முடிக்கப்பட்ட இந்த எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (re-open) செய்ய

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2024.03.15 18:20:03 +0530

வேண்டுமென்று மனுதாரர்கள் கூறுகின்றனர்.

6) எதிர்மனுதாரர்கள் தரப்பில், 1ம் மனுதாரருக்கு என்ன வகையான உடல்நலக் குறைவு ஏற்பட்டது, அதற்கு என்ன வகையான சிகிச்சை பெற்றார் என்று மனுவில் தெரிவிக்கவில்லை என்றும், 1ம் மனுதாரரின் பெற்றோர்களான 2, 3 மனுதாரர்களாவது வழக்கறிஞரை சந்தித்து குறுக்குவிசாரணைக்கான தகவல்களை தெரிவித்திருக்கலாம் என்றும், நியாயமான காரணமின்றி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது.

7) 1ம் மனுதாரருக்கும், இம்மனுவின் எதிர்மனுதாரர்களின் மகளுக்கும் பிறந்த இளவர் குழந்தைக்கு காப்பாளர் நியமனம் செய்வது சம்பந்தமாக, எதிர்மனுதாரர்கள் அசல் மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. அசல் மனுவில் ம.சா.1 ஐ இம்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய பல வாய்தாக்கள் வைக்கப்பட்டபோதிலும், ம.சா.1 ஐ இம்மனுதாரர்கள் தரப்பில் அசல் மனுவில் குறுக்குவிசாரணை செய்யா நிலையில், 09.08.2023 ல் ஒருதலைபட்சமாக்கப்பட்டு, ம.சா.2 ம் விசாரிக்கப்பட்டு, 04.11.2023 ல் இந்த எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு, உத்தரவிற்காக அசல் மனு நிலுவையில் உள்ளது. இருந்தபோதிலும், அசல் மனு இளவர் குழந்தைக்கு பாதுகாவலர் நியமிப்பது சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இளவர் சாய்முகிலனுக்கு இந்த மனுவின் 1ம் மனுதாரர் தந்தை என்ற நிலையில், மனுதாரர்கள் அவர்களது தரப்பு கட்சியை நிரூபிக்க ஏதுவாக,

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2024.03.15 18:20:12 +0530

அவர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே, இந்த மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 ஐ குறுக்குவிசாரணை செய்வதற்கு ஏதுவாக, அசல் மனுவில் முடிக்கப்பட்ட மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை re–open செய்து உத்தரவிட வேண்டியது அவசியமான ஒன்றாகும். இருந்தபோதிலும், மனுதாரர்கள் அவர்களது தவறுகையை உணரும் பொருட்டு, எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.300/–ஐ அளிக்கும் பட்சத்தில் இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று முடிவு செய்து இவ்வாறாக இந்த மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8) முடிவாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.300/–ஐ 21.03.2024 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 22.03.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

M SELVAM

Digitally signed by M SELVAM
Date: 2024.03.15 18:20:34 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:–</u>**

இல்லை

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் :–</u>**

இல்லை

M SELVAM

Digitally signed by M SELVAM
Date: 2024.03.15 18:20:42 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.